# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்

**ந.க.எண்: 15747/2021/இ2-1 நாள்: 02.07.2021**

## பசலி 1431 - ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

இத்திருக்கோயிலில் கீழ்காணும் விபரப்படியான இனங்களை கொள்முதல் செய்ய மற்றும் பிரசாதங்கள் தயார் செய்ய கூலி வகைக்கு பசலி 1431ம் காலத்திற்கு மட்டும் (ஏலத்தேதி முதல் 30.06.2022 வரை) உரிமம் வழங்க ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளி திறப்பானது எதிர்வரும் 23.07.2021 அன்று இத்திருக்கோயில் வளாகம் கோவிந்தம்மாள் திருமண மண்டபத்தில் வைத்து நடைபெறுகிறது.

| வ. எண் | கொள்முதல் இனம் | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை | சால்வன்சி மதிப்பு ரூ. | ஒப்பந்தப் புள்ளி படிவம் விலை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | பஞ்சாமிர்தம் தயாரிக்க தேவையான நன்கு முற்றிய கற்பூரவள்ளி வாழைக்காய் சப்ளை செய்தல். **(வாழைக்காய் 1கிலோவிற்கு விலை குறிப்பிட வேண்டும்)** | 5,00,000/- | 5,00,000/- | 1000/- |
| 2. | அரை கிலோ எடை அளவு கொண்ட பஞ்சாமிர்தம் அடைத்து வைத்து விற்பனை செய்வதற்கு உரிய திருக்கோயில் படம் லேபிள் கொண்ட பிளாஸ்டிக் பெட்ஜார் சப்ளை செய்தல். **(பெட்ஜார் 1எண்ணத்திற்கு விலை குறிப்பிட வேண்டும்)** | 2,00,000/- | 2,00,000/- | 1000/- |
| 3. | 4 inch X 4 inch , 5 inch X 6 inch , 6 inch X 9 inch அளவு திருக்கோயில் படம் அச்சிடப்பட்ட காகித பவுச் சப்ளை செய்தல் உரிமம் **(காகித பவுச் 1எண்ணத்திற்கு விலை குறிப்பிட வேண்டும்)** | 1,00,000/- | 1,00,000/- | 500/- |
| 4. | திருக்கோயில் படம் கொண்ட 10 inch X 12 inch அளவு கொண்ட மஞ்சள் நிற துணிப்பை சப்ளை செய்யும் உரிமம் **(துணிப்பை 1எண்ணத்திற்கு விலை குறிப்பிட வேண்டும்)** | 2,00,000/- | 2,00,000/- | 500/- |
| 5. | பிரசாதங்கள் தயார் செய்ய கீழ்காணும் இனங்களுக்கு தயாரிப்புக் கூலி<br>1. 50 கிராம் லட்டு 1க்கு<br>2. 50 கிராம் தேன்குழல் 1க்கு<br>3. 50 கிராம் அதிரசம் 1க்கு<br>4. மிளகு வடை 1க்கு<br>5. 100 கிராம் புளிசாதம் 1க்கு<br>6. 100 கிராம் சர்க்கரை பொங்கல் 1க்கு<br>7. 100 கிராம் தயிர்சாதம் 1க்கு<br>8. 50 கிராம் திணை மாவு 1க்கு<br>9. 500 கிராம் பஞ்சாமிர்தம் 1க்கு<br>(ஒப்பந்தப்படிவத்தில் 9 இனங்களுக்கும் தனித்தனியே கூலி குறிப்பிடப்பட வேண்டும்.) | 1,00,000/- | 1,00,000/- | 500/- |

ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள விரும்புவோர் முன்வைப்புத்தொகையை ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக 08.07.2021 க்கு பிறகு பெறப்பட்ட கேட்பு வரைவோலை (Demand Draft) அல்லது வங்கியர் காசோலை (Bankers Cheque)ஐ, திருச்செந்தூர் கிளையில் உள்ள வங்கிகளில் மாற்றத்தக்க வகையில், "இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்" என்ற பெயரில் திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி, கேட்பு வரைவோலை (Demand Draft) அல்லது வங்கியர் காசோலை (Bankers Cheque)-ன் நகலை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து கொடுக்க வேண்டும். மேற்படி முன் வைப்புத்தொகை செலுத்தியதின் நகலுடன் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. எக்காரணத்தைக் கொண்டும் முன்வைப்புத்தொகை ரொக்கமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேலும் ஏதேனும் கூடுதல் விபரங்களை இத்திருக்கோயில் தலைமை அலுவலகத்தில் வேலை நாட்களில் தொலைபேசி மூலமாகவோ (04639-242221) அல்லது நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

| | |
|---|---|
| 1.ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கப்படும் தேதி மற்றும் நேரம் | 14.07.2021 முற்பகல்10.00 மணி முதல் 20.07.2021 பிற்பகல் 2.00 மணி வரை |
| 2. பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் தேதி மற்றும் நேரம் | 22.07.2021 முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 05.00 மணிவரை |
| 3. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் தேதி மற்றும் நேரம் | 23.07.2021 பிற்பகல் 4.00 மணி முதல் |
| 4. ஒப்பந்தப்புள்ளி திறப்பு நடைபெறும் இடம் | கோவிந்தம்மாள் திருமண மண்டபம் திருக்கோயில் வளாகம் |
| 5. ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை. | வரிசை 1 முதல் 5 முடிய உள்ள அனைத்து இனங்களுக்கும் ரூ.250/-. |

## ஒப்பந்தப்புள்ளி இனங்களின் தனி நிபந்தனைகள்

### 1. பஞ்சாமிர்தம் தயாரிக்க தேவையான நன்கு முற்றிய கற்பூரவள்ளி வாழைக்காய் சப்ளை செய்தல்.

1. ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான வரி, விற்பனை வரி, GST வரி மற்றும் இதர நடைமுறையில் உள்ள வரிகள் அனைத்தும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பட்டியலிலும் மேற்படி வரிகள் பிடித்தம் செய்து மீதி பட்டியல் தொகை வழங்கப்படும்.
2. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN CARD) மற்றும் GST சான்று நகல் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தையும் இணைத்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.
3. பஞ்சாமிர்தம் தயாரிப்பதற்கு தேவையான நல்ல திரட்சியுடன் தரமான கற்பூரவள்ளி வாழைக்காய் சப்ளை செய்ய வேண்டும்.
4. கற்பூரவள்ளி வாழைக்காய் சப்ளைக்கான விலை விபரம் கிலோ ஒன்றுக்கு குறிப்பிட வேண்டும்.
5. 01.06.2021 தேதிக்கு பிறகு வட்டாட்சியரிடம் பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயருக்கான ரூ5,00,000/-க்கான (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) அசல் சால்வன்சி ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்க வேண்டும். சால்வன்சி சான்றிதழ் தர இயலாதவர்கள் அதற்குரிய தொகைக்கு ”இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்” என்கிற பெயரில் திருச்செந்தூரில் மாற்றதக்க வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கி வரைவோலையாகவும் செலுத்தலாம்.
6. ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயரில் வாழைக்காய் வியாபாரம் செய்து வருவதற்கு நடப்பு காலத்தில் செல்லதக்க வகையில் வணிகவரித்துறையில் பதிவு செய்ததற்கான பதிவு சான்றிதழ் நகல் ஒப்புந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்க வேண்டும்.
7. ஒப்பந்தப்புள்ளி வழங்கும் நபர் கற்பூரவள்ளி வாழைக்காய் மொத்த கொள்முதல் வியாபாரத்தில் குறைந்தது ஐந்து வருட அனுபவம் இருக்க வேண்டும். வியாபாரத்தில் ஐந்து வருடம் அனுபவத்திற்கான வியாபார கணக்குகளை பட்டய கணக்கர் (Chartered Accountant) தணிக்கை செய்ததற்கான சான்று பெற்று அசலாக ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.
8. 01.04.2014ம் ஆண்டு முதல் 31.03.2019 ஆண்டு முடிய உள்ள 5ஆண்டுகளுக்கு ஒவ்வொரு வருடமும் வருடம் ஒன்றுக்கு வாழைக்காய் வியாபாரத்தில் ரூ75,00,000/-(ரூபாய் எழுபத்தி ஐந்து லட்சம்) குறையாமல் வரவு செலவு செய்ததற்காக வருமான வரித்துறையில் தாக்கல் செய்த Balance Sheet பட்டய கணக்கரால் (Chartered Accountant) மேலொப்பம்(Attested) செய்யப்பட்ட நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்கப்பட வேண்டும். மேலும் வருமான வரி செலுத்தியதற்கு (Income Tax) சான்றின் நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.
9. ஒப்பந்தப்புள்ளிதாரர் தன் பெயரில் தன் சொந்த விலாசத்தில் கற்பூரவள்ளி வாழைக்காய் கடை வைத்து வியாபாரம் செய்வதற்கான நகராட்சி / மாநகராட்சியிடம் நடப்பு காலத்திற்கான உரிமம் பெற்றதிற்கான உரிம நகல் சான்று ஒன்றினை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.
10. மேற்படி நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.
11. பஞ்சாமிர்த பொறுப்பாளரிடம் அவ்வப்போது ஒப்பந்தப்புள்ளிதாரரே நேரில் கொள்முதல் கேட்பு சீட்டு பெற்றுக்கொண்டு, கொள்முதல் கேட்பு சீட்டிலுள்ள விபரப்படி தேவையான காலத்தில் தேவையான அளவு தரமான மேற்படி வாழைக்காய்களை தங்கு தடையின்றி சப்ளை செய்ய வேண்டும். அவ்வாறு தேவைப்படும் அளவிற்கு சப்ளை செய்ய தவறினால் திருக்கோயில் நிர்வாகம் மூலம் வெளிசந்தையில் நேரடியாக கொள்முதல் செய்து அதனால் ஏற்படும் கூடுதல் செலவீனங்கள் ஒப்பந்தப்புள்ளிதாரரிடம் வசூல் செய்யப்படும்.
12. ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்படும் கற்பூரவள்ளி வாழைக்காய் பஞ்சாமிர்தப்பிரிவு பொறுப்பாளர் நல்ல தரமானது என திருப்தியடைந்த பிறகே அவர் முன்னிலையில் எடைப்போட்டு கொடுக்க வேண்டும். வாழைக்காய் திரட்சியற்றதாகவும், பிஞ்சாகவும் இருந்தாலும், பஞ்சாமிர்தம் தயாரிக்க ஏற்றதாக இல்லாமல் இருந்தாலும், சம்மந்தப்பட்ட அலுவலர்கள் அதை நிராகரிக்க உரிமையுண்டு. இதற்கான தொகை எதுவும் கோர ஒப்பந்ததாரருக்கு உரிமை எதுவும் இல்லை. வாழைக்காய் தாரிலுள்ள வாழைக்கட்டைகளை நீக்கம் செய்து வாழைக்காய்கள் சீப்புகளை மட்டும் சப்ளை செய்ய வேண்டும்

13. வாழைத்தாருடன் வாழைக்காய் சப்ளை செய்யப்பட்டால் வாழைத்தாரின் எடையை கழித்து வாழைக்காய்க்கு எடைப்போடப்படும். இதர நிபந்தனைகள் ஏதும் இருந்தால் அது ஏலத்தின் போது அறிவிக்கப்படும்.
14. ஒப்பந்தப்புள்ளிதாரர் திருக்கோயில் தேவைக்கு அதிகமான மேற்படி வாழைக்காய்களை சேமித்து வைத்து வாழைக்காய் கெட்டுப்போனால் அதற்கு திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பேற்காது. மேலும் புயல், மழை போன்ற இயற்கை சீற்றங்களினால் வாழைக்காய்க்கு சேதமேற்பட்டதாககூறி சப்ளையை நிறுத்தக்கூடாது. தேவைக்கேற்ப தங்கு தடையின்றி சப்ளை செய்ய வேண்டும்.
15. சப்ளை செய்யப்படும் மேற்படி வாழைக்காய்களுக்கு ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வழங்கப்படும் பட்டியலில் ஒவ்வொன்றிலும் வருமான வரித்தொகை பிடித்தம் செய்து கொண்டு மீதித்தொகை வழங்கப்படும்.
16. ஒப்பந்தப்புள்ளிதாரரால் திருக்கோயிலுக்கு இழப்பு ஏற்பட்டால் ஒப்பந்தப்புள்ளிதாரரால் செலுத்தப்பட்டுள்ள முன்வைப்புத்தொகையில் பிடித்தம் செய்யப்படும்.

## 2. அரை கிலோ கொள்ளவு கொண்ட பஞ்சாமிர்தம் அடைத்து வைத்து விற்பனை செய்வதற்கு உரிய திருக்கோயில் படம் லேபிள் கொண்ட பிளாஸ்டிக் பெட்ஜார் சப்ளை செய்தல்

1. ஒப்பந்தப்புள்ளி திறப்பின்போது மாதிரிகள் (sample) பரிசீலனைக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான வரி, விற்பனை வரி, GST வரி மற்றும் இதர நடைமுறையில் உள்ள வரிகள் அனைத்தும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பட்டியலிலும் மேற்படி வரிகள் பிடித்தம் செய்து மீதி பட்டியல் தொகை வழங்கப்படும்.
2. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN CARD) மற்றும் GST சான்று நகல் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தையும் இணைத்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.
3. ISO தரசான்று உள்ள நிறுவனம் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள வேண்டும். ISO தரசான்று உள்ள நிறுவனம் என்பதற்கான சான்றிதழின் நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.
4. 01.07.2019 தேதிக்கு பிறகு வட்டாட்சியரிடம் பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயருக்கான ரூ2,00,000/-க்கான (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) அசல் சால்வன்சி ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்க வேண்டும். சால்வன்சி சான்றிதழ் தர இயலாதவர்கள் அதற்குரிய தொகைக்கு "இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்" என்கிற பெயரில் திருச்செந்தூரில் மாற்றதக்க வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கி வரைவோலையாகவும் செலுத்தலாம்.
5. ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயரில் பெட்ஜார் சப்ளை வியாபாரம் செய்து வருவதற்கு நடப்பு காலத்தில் செல்லதக்க வகையில் வணிகவரித்துறையில் பதிவு செய்ததற்கான பதிவு சான்றிதழ் நகல் ஒப்புந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்க வேண்டும்.
6. ஒப்பந்தப்புள்ளிதாரர் தன் பெயரில் தன் சொந்த விலாசத்தில் பெட்ஜார் சப்ளை வியாபாரம் செய்வதற்கான நகராட்சி / மாநகராட்சியிடம் நடப்பு காலத்திற்கான உரிமம் பெற்றதிற்கான உரிம நகல் சான்று ஒன்றினை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.
7. மேற்படி நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.
8. பெட்ஜார் தனியாகவும் அதில் ஒட்டப்படும் லேபிள் தனியாகவும் சப்ளை செய்ய வேண்டும்.
9. பெட்ஜாருடன் சப்ளை செய்யப்படும் லேபிள் $9\frac{1}{2}^{\text{inch}}$ X $2\frac{1}{2}^{\text{inch}}$ என்கிற அளவில் இருக்க வேண்டும்.
10. பெட்ஜாருடன் தனியாக சப்ளை செய்யப்படும் லேபிள் பேப்பரில் என்னென்ன விபரங்கள் அச்சிடப்பட வேண்டும், எந்தெந்த வடிவங்கள் மற்றும் என்னென்ன வண்ணங்களில் அச்சிடப்படும் வேண்டும் என்பதை திருக்கோயில் நிர்வாகத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொண்ட பின்னரே சப்ளை செய்ய வேண்டும்.
11. திருக்கோயில் நிர்வாகத்தால் அவ்வப்போது வழங்கப்படும் தேவைப்பட்டியல் விபரப்படி தேவையான காலத்தில் தேவையான அளவு தரமான பெட்ஜார் சப்ளை தங்கு தடையின்றி சப்ளை செய்ய வேண்டும். அவ்வாறு தேவைப்படும் அளவிற்கு சப்ளை செய்ய தவறினால் திருக்கோயில் நிர்வாகம் மூலம் வெளிசந்தையில் நேரடியாக கொள்முதல் செய்து அதனால் ஏற்படும் கூடுதல் செலவீனங்கள் ஒப்பந்தப்புள்ளிதாரரிடம் வசூல் செய்யப்படும்.
12. ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்படும் பெட்ஜார் தரமானது என நிர்வாத்தால் திருப்தியடைந்த பிறகே பொறுப்பாளர் முன்னிலையில் கொடுக்க வேண்டும். பெட்ஜார் சப்ளை பஞ்சாமிர்தம் அடைப்பதற்கு ஏற்றதாக இல்லாமல் இருந்தாலும், சம்மந்தப்பட்ட அலுவலர்கள் அதை நிராகரிக்க உரிமையுண்டு. இதற்கான தொகை எதுவும் கோர ஒப்பந்ததாரருக்கு உரிமை எதுவும் இல்லை.
13. சப்ளை செய்யப்படும் மேற்படி பெட்ஜாருக்கு ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வழங்கப்படும் பட்டியலில் ஒவ்வொன்றிலும் வருமான வரித்தொகை பிடித்தம் செய்து கொண்டு மீதித்தொகை வழங்கப்படும்.

### 3. $4^{inch}$ X $4^{inch}$ , $5^{inch}$ X $6^{inch}$ , $6^{inch}$ X $9^{inch}$ அளவு திருக்கோயில் படம் அச்சிட்ட காகித பவுச் சப்ளை செய்தல்

1. ஒப்பந்தப்புள்ளி திறப்பின்போது மாதிரிகள் (sample) பரிசீலனைக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான வரி, விற்பனை வரி, GST வரி மற்றும் இதர நடைமுறையில் உள்ள வரிகள் அனைத்தும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பட்டியலிலும் மேற்படி வரிகள் பிடித்தம் செய்து மீதி பட்டியல் தொகை வழங்கப்படும்.
2. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN CARD) மற்றும் GST சான்று நகல் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தையும் இணைத்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.
3. ISO தரசான்று உள்ள நிறுவனம் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள வேண்டும். ISO தரசான்று உள்ள நிறுவனம் என்பதற்கான சான்றிதழின் நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.
4. ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயரில் காகித பவுச் சப்ளை வியாபாரம் செய்து வருவதற்கு நடப்பு காலத்தில் செல்லதக்க வகையில் வணிகவரித்துறையில் பதிவு செய்ததற்கான பதிவு சான்றிதழ் நகல் ஒப்புந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்க வேண்டும்.
5. ஒப்பந்தப்புள்ளிதாரர் தன் பெயரில் தன் சொந்த விலாசத்தில் காகித பவுச் சப்ளை வியாபாரம் செய்வதற்கான நகராட்சி / மாநகராட்சியிடம் நடப்பு காலத்திற்கான உரிமம் பெற்றதிற்கான உரிம நகல் சான்று ஒன்றினை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.
6. மேற்படி நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.
7. ஒவ்வொரு அளவு கொண்ட காகித பவுச்சிற்கும் தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளியில் விலை குறிப்பிட வேண்டும்.
8. சப்ளை செய்யப்படும் காகித பவுச்சில் என்னென்ன விபரங்கள் அச்சிடப்பட வேண்டும், எந்தெந்த வடிவங்கள் மற்றும் என்னென்ன வண்ணங்களில் அச்சிடப்படும் வேண்டும் என்பதை திருக்கோயில் நிர்வாகத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொண்ட பின்னரே அதற்கேற்ப காகித பவுச் அச்சிட்டு சப்ளை செய்ய வேண்டும்.
9. காகித பவுச்சில் வெளிபாகத்தில் எண்ணெய் கசிவு தெரியாத வண்ணம் காகித பவுச்சில் உள்பாகம் அலுமினிய கோட்டிங் செய்திருக்க வேண்டும்.
10. திருக்கோயில் நிர்வாகத்தால் அவ்வப்போது வழங்கப்படும் தேவைப்பட்டியல் விபரப்படி தேவையான காலத்தில் தேவையான அளவு தரமான காகித பவுச் சப்ளை தங்கு தடையின்றி சப்ளை செய்ய வேண்டும். அவ்வாறு தேவைப்படும் அளவிற்கு சப்ளை செய்ய தவறினால் திருக்கோயில் நிர்வாகம் மூலம் வெளிசந்தையில் நேரடியாக கொள்முதல் செய்து அதனால் ஏற்படும் கூடுதல் செலவீனங்கள் ஒப்பந்தப்புள்ளிதாரரிடம் வசூல் செய்யப்படும்.
11. ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்படும் காகித பவுச் தரமானது என நிர்வாத்தால் திருப்தியடைந்த பிறகே பொறுப்பாளர் முன்னிலையில் கொடுக்க வேண்டும். காகித பவுச் பிரசாதங்கள் வைப்பதற்கு ஏற்றதாக இல்லாமல் இருந்தாலும், சம்மந்தப்பட்ட அலுவலர்கள் அதை நிராகரிக்க உரிமையுண்டு. இதற்கான தொகை எதுவும் கோர ஒப்பந்ததாரருக்கு உரிமை எதுவும் இல்லை.
12. சப்ளை செய்யப்படும் மேற்படி காகித பவுச்க்கு ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வழங்கப்படும் பட்டியலில் ஒவ்வொன்றிலும் வருமான வரித்தொகை பிடித்தம் செய்து கொண்டு மீதித்தொகை வழங்கப்படும்.

### 4. திருக்கோயில் படம் கொண்ட $10^{inch}$ X $12^{inch}$ அளவு கொண்ட துணிப்பை சப்ளை செய்தல்

1. ஒப்பந்தப்புள்ளி திறப்பின்போது மாதிரிகள் (sample) பரிசீலனைக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான வரி, விற்பனை வரி, GST வரி மற்றும் இதர நடைமுறையில் உள்ள வரிகள் அனைத்தும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பட்டியலிலும் மேற்படி வரிகள் பிடித்தம் செய்து மீதி பட்டியல் தொகை வழங்கப்படும்.
2. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN CARD) மற்றும் GST சான்று நகல் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தையும் இணைத்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.
3. ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயரில் துணிப்பை சப்ளை வியாபாரம் செய்து வருவதற்கு நடப்பு காலத்தில் செல்லதக்க வகையில் வணிகவரித்துறையில் பதிவு செய்ததற்கான பதிவு சான்றிதழ் நகல் ஒப்புந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்க வேண்டும்.
4. ஒப்பந்தப்புள்ளிதாரர் தன் பெயரில் தன் சொந்த விலாசத்தில் துணிப்பை சப்ளை வியாபாரம் செய்வதற்கான நகராட்சி / மாநகராட்சியிடம் நடப்பு காலத்திற்கான உரிமம் பெற்றதிற்கான உரிம நகல் சான்று ஒன்றினை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.
5. மேற்படி நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.
6. துணிப்பையில் அச்சிடப்பட வேண்டிய விபரங்கள் மற்றும் வடிவங்கள் அனைத்தும் திருக்கோயில் நிர்வாகத்தால் முடிவுசெய்து சொல்லப்படும். அதற்கேற்ப துணிப்பை அச்சிட்டு தர வேண்டும்.(துணிப்பையானது 100 சதவீதம் காட்டன் ஆகவுமட, 30-40 count கொண்டதாகவும் , soft கஞ்சி போட்டதாகவும் இருக்க வேண்டும்)
7. திருக்கோயில் நிர்வாகத்தால் அவ்வப்போது வழங்கப்படும் தேவைப்பட்டியல் விபரப்படி தேவையான காலத்தில் தேவையான அளவு தரமான துணிப்பை சப்ளை தங்கு தடையின்றி சப்ளை செய்ய வேண்டும். அவ்வாறு தேவைப்படும் அளவிற்கு சப்ளை செய்ய தவறினால்

திருக்கோயில் நிர்வாகம் மூலம் வெளிசந்தையில் நேரடியாக கொள்முதல் செய்து அதனால் ஏற்படும் கூடுதல் செலவீனங்கள் ஒப்பந்தப்புள்ளிதாரரிடம் வசூல் செய்யப்படும்.

8. ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்படும் துணிப்பை தரமானது என நிர்வாகத்தால் திருப்தியடைந்த பிறகே பொறுப்பாளர் முன்னிலையில் கொடுக்க வேண்டும். துணிப்பை பிரசாதங்கள் வைப்பதற்கு ஏற்றதாக இல்லாமல் இருந்தாலும், சம்மந்தப்பட்ட அலுவலர்கள் அதை நிராகரிக்க உரிமையுண்டு. இதற்கான தொகை எதுவும் கோர ஒப்பந்ததாரருக்கு உரிமை எதுவும் இல்லை.
9. சப்ளை செய்யப்படும் மேற்படி துணிப்பை ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வழங்கப்படும் பட்டியலில் ஒவ்வொன்றிலும் வருமான வரித்தொகை பிடித்தம் செய்து கொண்டு மீதித்தொகை வழங்கப்படும்.
10. சப்ளை செய்யப்படும் துணிப்பை சேதமடைந்த நிலையிலோ, தவறாக அச்சிடப்பட்டிருந்தாலோ மற்றும் வேறு ஏதேனும் ஒரு வகையில் அவை உபயோகத்திற்கு லாயக்கற்றவை என திருக்கோயில் நிர்வாகம் கருதினால் அவைகளை நிராகரிக்க திருக்கோயில் நிர்வாகத்திற்கு முழு உரிமையுண்டு. இதனை ஆட்சேனை செய்ய ஒப்பந்தக்காரருக்கு உரிமை எதுவும் இல்லை.
11. துணிப்பைகளில் அரசினால் தடை செய்யப்பட்ட நெகிழி பொருட்கள் கலந்திருக்க கூடாது.

## 5.பிரசாதங்கள் தயார் செய்ய தயாரிப்புக் கூலி

1. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN CARD) மற்றும் GST சான்று நகல் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தையும் இணைத்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளிதாரரது அதார் அட்டை நகல், நடப்பு ஆண்டில் வருமானவரி தாக்கல் செய்த நகல் ஆகியவற்றை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும். அவ்வாறாக இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
3. ஒப்பந்தப்புள்ளிதாரரர் உணவு பாதுகாப்புத் துறையில் நடப்பு காலத்தில் பதிவு செய்ததற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.
4. முதுநிலை திருக்கோயில்களில் பிரசாதங்கள் தயார் செய்து விற்பனை செய்யும் உரிமம் எடுத்து நடத்திய அனுபவம் குறைந்தபட்சம் 3 ஆண்டுகளாவது இருக்க வேண்டும். அதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.
5. FSSAI சான்று பெற்ற நபராக இருக்க வேண்டும். சான்று இணைக்கப்பட வேண்டும். மேற்படி சான்று பெற்றவர் மட்டுமே ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள வேண்டும்.
6. திருக்கோயில் திட்டப்படி தரம் மற்றும் எடையில் பிரசாதங்கள் தயாரித்து வழங்ப்பட வேண்டும்.
7. பிரசாதங்கள் தரமும் எடையும் பரிசோதனைக்கு உட்பட்டது. தயார் செய்யப்படும் பிரசாதங்கள் அரசு உணவு கட்டுப்பாட்டுத் துறையின் ஆய்வுக்கு உட்பட்டதாகும்.
8. பிரசாதங்கள் தயாரிக்கப்படும் போது உரிய எடையுடன் முழுமையான அளவில் உடையாமல் இருக்க வேண்டும். அதிக சேதாரம் தவிர்க்கப்பட வேண்டும்.

## ஒப்பந்தப்புள்ளி பொது நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி தமிழ்நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை விதிகளுக்கு உட்பட்டு நடத்தப்படும்.

2. ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை செலுத்தாதவர்களும், இத்திருக்கோயிலுக்கு எந்த வகையிலும் முன்பாக்கி வைத்திருப்பவர்களும், இத்திருக்கோயில் இடம் ஆக்கிரமிப்புதாரர்களும் ஒப்பந்தப்புள்ளி கொடுக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

3. ஒப்பந்தப்புள்ளியில் மிகக்குறைந்த கேள்வி கேட்பவருக்கு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ரத்து அங்கீகாரத்திற்குட்பட்டு உறுதி செய்யப்படும்

4. ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யப்பட்டவுடன் மேற்படி ஒப்பந்தப்புள்ளி உறுதி ஆகாதவர்களது முன்வைப்புதொகை உடன் திருப்பிக்கொடுக்கப்படும்.

5. மிகக்குறைந்த கேள்வி கொடுக்கும் ஒப்பந்ததாரர் நிர்வாகம் தெரிவிக்கும் உரிய நேரத்தில் பொருட்களை சப்ளை செய்ய வேண்டும். ஒப்பந்தப்புள்ளிதாரர் நிர்வாகம் தெரிவிக்கும் உரிய நேரத்தில் சப்ளை செய்யமாட்டார் அல்லது தரமான பொருளை சப்ளை செய்யவில்லை என நிர்வாக அதிகாரி கருதினால், ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி நடத்த நிர்வாக அதிகாரிக்கு உரிமை உண்டு. இதனை ஆட்சேபிக்க ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு எவ்வித உரிமையும் கிடையாது.

6. ஒப்பந்தப்புள்ளி உறுதி பெற்றவர் நிர்வாகம் தெரிவிக்கும் உரிய நேரத்தில் திருக்கோயில் தெரிவிக்கும் இடத்தில் சப்ளை செய்யும் வரை தன் சொந்த செலவு செய்து சப்ளை செய்ய வேண்டும்.

7. கொள்முதல் உரிமம் பெற்றவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் அவ்வுரிமையை மாற்றம் (டிரான்ஸ்பர்) செய்யவோ அல்லது பினாமியாக நடத்தவோ உரிமை கிடையாது. மேலும் தன் விருப்பப்படி உரிமத்திலிருந்து விடுபடவும் உரிமை இல்லை.

8. சப்ளை செய்யப்படும் பொருட்களுக்கு மாதம் ஒருமுறை பட்டியல் தயார் செய்து தொகை வழங்கப்படும்.

9. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் மேற்படி நிபந்தனைகள் அனைத்தும் நன்கு தெரிந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்த பின் கூறும் எவ்விதமான ஆலோசனைகளையும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

10. சப்ளை செய்யும் உரிமத்திற்கு அனுமதி உத்தரவு ஒப்பந்தகாரருக்கு வழங்கிய பின்னர் கொள்முதல் இனங்கள் திருக்கோயிலுக்கு தேவைப்படவில்லையெனில் சப்ளை செய்யும் உரிமம் இரத்து செய்யப்படும். இத்திருக்கோயில் நடைமுறை வழக்கங்களுக்கு கட்டுப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.

11. ஒப்பந்தப்புள்ளியில் தெரிவித்துள்ளபடி பொருட்கள் சப்ளை செய்தபின் ஒப்பந்தப்புள்ளி படி கண்காணிப்பாளர் அத்தாட்சியுடன் பட்டியல் கொடுத்து தொகை பெற்றுக் கொள்ள வேண்டும்.

12. ஒப்பந்தகாரர் சப்ளை செய்யும் பொருட்கள் தரமற்றதாக என்று கண்டறிந்தால் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி நடத்த நிர்வாக அதிகாரிக்கு உரிமை உண்டு. அதனால் திருக்கோயிலுக்கு ஏற்படும் இழப்புக்கு ஒப்பந்தகாரரே முழுப்பொறுப்பாக்கி முன்வைப்புத்தொகை பிடித்தம் செய்யப்படும்.

13. ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள பொருட்களின் மாதிரியை ஒப்பந்தப்புள்ளி திறப்பின் போது நேரில் காண்பிக்க வேண்டும்.

14. உரிமக் காலம் ஆரம்பிப்பதற்கு முன்பாக காரணம் எதுவும் சொல்லாமல் நிபந்தனைகளை கூட்டவும் குறைக்கவும் அல்லது மாறுதல் செய்யவும் திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு. காரணம் கூறாமல் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையை நிறுத்தி வைக்கவோ அல்லது ஒத்திவைக்கவோ இணை ஆணையர் / நிர்வாக அதிகாரிக்கு உரிமை உண்டு. ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்தபின் கொள்முதல் உரிமம் உறுதி பெற்றவர்கள் பதிவேட்டில் தன் முழு விலாசத்தையும் எழுதி கையெழுத்து செய்ய வேண்டும். உறுதி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர் செலுத்தியிருக்கும் காப்புத் தொகைக்கு எவ்வித வட்டியும் கிடையாது.

15 குறைந்த கேள்வி ஒப்பந்தகாரர் சப்ளை செய்ய அனுமதி உத்தரவு பிறப்பித்தபின் ரூ.20/- மதிப்புள்ள முத்திரைக் காகிதத்தில் ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்கவேண்டும்.

16 ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்ள வந்தவர்கள் நியாயமான தொகையை குறிப்பிடவில்லை என்று திருக்கோயில் நிர்வாகம் கருதினால் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க கோயில் நிர்வாகத்திற்கு முழு உரிமை உண்டு. இதை ஆட்சேபிக்க யாருக்கும் உரிமை கிடையாது.

17 உரிமம் இனங்களுக்கு விற்பனை வரி மற்றும் வருமானவரி நடைமுறை விதிகளின்படி கணக்கிட்டு திருக்கோயிலில் செலுத்த வேண்டும்.

18 போட்டியின் காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் விலையை குறைத்து குறிப்பிட்டு திருக்கோயிலுக்கு தரமில்லாத பொருட்களை சப்ளை செய்தால் மறு அறிவிப்பின்றி சப்ளை செய்யும் உரிமம் ரத்து செய்யப்படும்.

19 ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்பவர்கள் தொற்றுநோய் உள்ளவர்களாக இருக்கக் கூடாது. . உரிமம் பெறுவர் இந்து சமயத்தவராக இருக்க வேண்டும்.

20 உரிமம் பெற்றவர்களுக்கு இராஜீயம் மற்றும் இயற்கைச் சீற்றங்கள் ஆகியவற்றால் ஏற்படும் இழப்புகளுக்கு திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பு ஏற்க இயலாது.

21 ஒப்பந்தகாரர் தானாக முன்வந்து உரிமத்தினை ஒப்படைப்பு செய்ய நேர்ந்தால் முன்வைப்புத் தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது. மேலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். அதில் நஷ்டம் ஏற்பட்டால் உரிமதாரரே இதற்கு பொறுப்பு ஆவார்.

22 ஒப்பந்தப்புள்ளியின்போது சமர்பிக்கப்படும் வங்கி வரைவோலைகள், வங்கி காசோலைகள் போன்றவைகளை திருக்கோயிலுக்கு காசாக்குவதில் வங்கி கழிவு ஏதும் ஏற்பட்டால் மேற்படி வங்கிக் கழிவு மூலம் உறுதி பெற்றவரே பொறுப்பு ஆவார்.

23 ஏல வைப்புத்தொகை செலுத்தாதவர்கள், இத்திருக்கோயிலுக்கு எந்த வகையிலும் பாக்கி உள்ளவர்கள், பாக்கியுள்ளவர்களுக்காக வேறு நபர்கள் பெயரால் அல்லது அவரது உறவினர் பெயரால் (தாய், தந்தை, மனைவி, மக்கள், சகோதரர்கள் மற்றும் பந்துக்கள்) கலந்து கொள்பவர்கள், கோயில் நன்மைக்கு புறம்பான செயல்களில் ஈடுபடுபவர்கள், கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், வழக்கு தொடரப்பட்டவர்கள், 25 வயது பூர்த்தியாகாதவர்கள், ஆகியவர்களை ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளின்போது கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது. ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் முடிவு செய்தபின்பு மேற்கண்ட நபர்கள் கலந்து கொண்டதாக தெரியவந்தால் மேற்படி உரிமம் ரத்து செய்யப்படும்.

24 ஒப்பந்தப்புள்ளியில் செலுத்தப்படும் முன்வைப்புத்தொகை, காப்பு தொகை ஒப்பந்தப்புள்ளி உறுதி பெற்றவருக்கு உரிமகாலம் முடிந்த பிறகு திரும்ப கொடுக்கப்படும். இதற்கு திருக்கோயிலில் இருந்து வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.

25 உரிமம் இனத்திற்கான நிபந்தனைகள் அனைத்தும் இந்திய சொத்துரிமை மாற்று சட்டத்தின் உரிமம் என்ற அத்தியாயத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை மட்டுமே பொருந்தும் மற்றும் கட்டுப்படுத்தும் அதன்படி ஓப்பந்தப்புள்ளி கொடுத்த பின்பு, ஓப்பந்தப்புள்ளி திறப்பதற்கு முன்னர் ஓப்பந்தப்புள்ளி கொடுத்தவர் இறந்து விட்டால், அவர் சார்பில் மேற்படி ஓப்பந்தப்புள்ளியை பரிசீலிக்க கோரவோ, ஓப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ளவோ இறந்து போன ஓப்பந்தப்புள்ளி கொடுத்
தவரின் இறக்குரிமையினருக்கு உரிமை இல்லை. இந்த உரிமம் ஜாரி செய்யப்பட்டவர் உரிமகாலத்தில் இறந்து போனாலும் உரிமம் தானாகவே ரத்து ஆகிவிடும்.

26 ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்பட்ட மேற்படி வாழைக்காய்களுக்கு பட்டியல் வழங்குவதில் நிர்வாக பீதியில் ஏதேனும் காலதாமதம் ஏற்பட்டாலும், அந்தக் காலதாமத்தைக் காரணம் காட்டாமல் தொடர்ந்து தேவைக்கேற்ப தடையின்றி வழங்க வேண்டும். 1431ம் பசலிக்கு சப்ளை செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர் மேற்படி பசலி முடிவடைந்த பிறகு 1432ம் பசலிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஆணையரால் அங்கீகரிக்கப்படும் வரையில் திருக்கோயில் நிர்வாகம் கேட்கும் பட்சத்தில் 1431ம் பசலி விலைக்கு தொடர்ந்து சப்ளை செய்ய வேண்டும்.

**இரா. கண்ணன் ஆதித்தன்., M.S.(USA)**
**தக்கார்**

**ம.அன்புமணி, M.A.,B.L.,**
**இணை ஆணையர்/செயல் அலுவலர் (கூ.பொ)**

# அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருச்செந்தூர்

1431ம் பசலி கொள்முதல் இனங்கள் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு விளம்பரம் செய்யப்படும் முகவரிகள் விவரப்பட்டியல்

ந.க.எண்: /2021/இ2 நாள்: 05.2021

| வ. எண் | முகவரி | வ. எண் | முகவரி |
|---|---|---|---|
| 1 | ஆணையர்,<br>இந்து சமய அறநிலையத்துறை<br>119,உத்தமர் காந்தி சாலை<br>சென்னை ___ 34 | 2 | இணைஆணையர்,<br>இந்து சமய அறநிலையத்துறை<br>ஆணையர் அலுவலகம்<br>119,உத்தமர் காந்தி சாலை,<br>சென்னை - 34 |
| 3 | இணைஆணையர்,<br>இந்து சமய அறநிலையத்துறை<br>விழுப்புரம். | 4 | இணை ஆணையர்/செயல் அலுவலர்<br>அருள்மிகு சுபிரமணிய சுவாமி<br>திருக்கோயில்<br>திருத்தனி |
| 5 | இணைஆணையர்,<br>இந்து சமய அறநிலையத்துறை<br>திருச்சி. | 6 | இணை ஆணையர்/செயல் அலுவலர்<br>அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர்<br>திருக்கோயில்<br>மதுரை |
| 7 | இணைஆணையர்,<br>இந்து சமய அறநிலையத்துறை<br>மதுரை | 8 | இணை ஆணையர்/செயல் அலுவலர்<br>அருள்மிகு அரங்கநாத சுவாமி<br>திருக்கோயில்<br>ஸ்ரீரங்கம்<br>திருச்சி மாவட்டம் |
| 9 | இணைஆணையர்,<br>இந்து சமய அறநிலையத்துறை<br>திருநெல்வேலி | 10 | இணை ஆணையர்/செயல் அலுவலர்<br>அருள்மிகு இராம நாத சுவாமி<br>திருக்கோயில்<br>இராமேஸ்வரம் |
| 11 | இணைஆணையர்,<br>இந்து சமய அறநிலையத்துறை<br>சிவகங்கை | 12 | இணை ஆணையர்/செயல் அலுவலர்<br>அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி<br>திருக்கோயில்<br>பழனி |
| 13 | இணைஆணையர்,<br>இந்து சமய அறநிலையத்துறை<br>கோயமுத்தூர். | 14 | துணை ஆணையர்/செயல் அலுவலர்<br>அருள்மிகு வடபழனியாண்டவர்<br>திருக்கோயில்,<br>வடபழனி |
| 15 | இணைஆணையர்,<br>இந்து சமய அறநிலையத்துறை<br>வேலூர். | 16 | இணைஆணையர்,<br>இந்து சமய அறநிலையத்துறை<br>தஞ்சாவூர். |
| 17 | இணைஆணையர்/செயல் அலுவலர்,<br>இணைக்கப்பட்ட மற்றும்<br>இணைக்கப்படாத திருக்கோயில்கள்,<br>சுசீந்திரம். | 18 | இணை ஆணையர்/செயல் அலுவலர்<br>அருள்மிகு மாரியம்மன்<br>திருக்கோயில்,<br>சமயபுரம். |
| 19 | இணை ஆணையர்/செயல் அலுவலர்<br>அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர்<br>திருக்கோயில்<br>மதுரை . | 20 | துணை ஆணையர்/செயல் அலுவலர்<br>அருள்மிகு கபாலீஸ்வரர்<br>திருக்கோயில்,<br>சென்னை. |
| 21 | துணை ஆணையர்/செயல் அலுவலர்<br>அருள்மிகு சங்கரநாராயணசுவாமி<br>திருக்கோயில்,<br>சங்கரன்கோவில், திருநெல்வேலி<br>மாவட்டம். | 22 | துணை ஆணையர்/செயல் அலுவலர்<br>அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்,<br>அழகர் கோவில், மதுரை மாவட்டம் |

| | | | |
|---|---|---|---|
| 23 | துணை ஆணையர்/செயல் அலுவலர்<br>அருள்மிகு சுப்பிரமணியசுவாமி<br>திருக்கோயில்,<br>திருப்பரன்குன்றம், மதுரை மாவட்டம் | 24 | உதவி ஆணையர்,<br>இந்து சமய அறநிலையத்துறை<br>திருநெல்வேலி - 2 |
| 25 | உதவி ஆணையர்,<br>இந்து சமய அறநிலையத்துறை<br>புதுக்கோட்டை | 26 | உதவி ஆணையர்,<br>இந்து சமய அறநிலையத்துறை<br>நாகர்கோயில் |
| 27 | உதவி ஆணையர்,<br>இந்து சமய அறநிலையத்துறை<br>தூத்துக்குடி. | 28 | உதவி ஆணையர்,<br>இந்து சமய அறநிலையத்துறை,<br>திருச்சி -2. |
| 29 | உதவி ஆணையர்/செயல் அலுவலர்<br>அருள்மிகு மாரியம்மன்திருக்கோயில்<br>இருக்கன்குடி, சாத்தூர் | 30 | உதவி ஆணையர்,<br>இந்து சமய அறநிலையத்துறை<br>திருநெல்வேலி - 2 |
| 31 | உதவி ஆணையர்,<br>இந்து சமய அறநிலையத்துறை<br>விருதுநகர். | 32 | கண்காணிப்பாளர்,<br>பேரூர் நெற்களஞ்சியம்,<br>புதுக்குடி, ஸ்ரீவைகுண்டம். |
| 33 | செயல் அலுவலர்,<br>அருள்மிகு சங்கரராமேஸ்வரர்<br>திருக்கோயில்,<br>தூத்துக்குடி. | 34 | நிர்வாக அதிகாரி,<br>அருள்மிகு நெல்லையப்பர் கோயில்,<br>திருநெல்வேலி. |
| 35 | மணியம்,<br>அருள்மிகு காஞ்சி விஜய<br>கச்சக்கொண்ட பாண்டீஸவகரர்<br>திருக்கோயில்,<br>குலசேகரன்பட்டிணம். | 36 | நிர்வாக அதிகாரி,<br>அருள்மிகு முத்தாரம்மன்<br>திருக்கோயில்,<br>குலசேகரன்பட்டிணம். |
| 37 | கண்காணிப்பாளர்,<br>சேரன்மகாதேவி நெற்களஞ்சியம்,<br>சேரன்மகாதேவி. | 38 | கண்காணிப்பாளர்,<br>சுப்பிரமணியபுரம் பண்ணை,<br>சுப்பிரமணியபுரம். |
| 39 | மாவட்ட ஆட்சித்தலைவர்,<br>தூத்துக்குடி மாவட்டம்,<br>தூத்துக்குடி. | 40 | கிராம அலுவலர்,<br>கிராமச் சாவடி,<br>திருச்செந்தூர் |
| 41 | நிர்வாக அதிகாரி,<br>சிறப்புநிலை பேரூராட்சி,<br>திருச்செந்தூர். | 42 | ஆணையர்,<br>ஊராட்சி ஒன்றியம்,<br>திருச்செந்தூர். |
| 43 | மணியம்,<br>அருள்மிகு சிவக்கொழுந்தீஸ்வரர்<br>திருக்கோயில்,<br>திருச்செந்தூர். | 44 | வருவாய் கோட்டாட்சியர்,<br>கோட்டாட்சியர் அலுவலகம்,<br>திருச்செந்தூர். |
| 45 | அறிவிப்பு பலகை,<br>டபேதார் மூலம்,<br>இத்திருக்கோயில் தலைமை<br>அலுவலகம். | 46. | அறிவிப்பு பலகை,<br>கண்காணிப்பாளர் மூலம்<br>இத்திருக்கோயில் உள்துறை |
| 47 | கிராம நிர்வாக அலுவலர்,<br>மேல திருச்செந்தூர் கிராமம். | 48 | அறிவிப்பு பலகை,<br>கண்காணிப்பாளர் மூலம்,<br>இத்திருக்கோயில் விடுதி. |